**ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி, (தன்னாட்சி)**

பல்கலைக்கழக மானியக் குழுவின் 2 (எஃப்) & 12 (பி) அங்கீகாரம் மற்றும்
தேசிய தரமதிப்பீட்டுக் குழுவின் மீள்தர மதிப்பீட்டில் “ஏ” தகுதி பெற்றது
(திருப்பராய்த்துறை, ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனத்தின் கிளை நிறுவனம்)
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, திருநெல்வேலி - 627012
அரியகுளம், திருநெல்வேலி – 627011

***தமிழ்த்துறை சார்பாக நடைபெற்ற***
***தேசியக் கருத்தரங்கம்***
***“தமிழ்மொழி வளர்ச்சியில் பன்முகப்பார்வை”***



திருநெல்வேலி ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரியில் (தன்னாட்சி), 20.12.2024 வெள்ளிக்கிழமை அன்று கல்லூரி செயலர் யதீஸ்வரி சரவணபவப்ரியா மற்றும் ஆலோசகர் யதீஸ்வரி முகுந்தப்ரியா அவர்களின் ஆசியுடனும், கல்லூரி இயக்குநர் பேராசிரியர் (மேஜர்) பொ. சந்திரசேகரன் அவர்களின் மேலான வழிகாட்டுதலோடும், **‘தமிழ்மொழி வளர்ச்சியில் பன்முகப்பார்வை’** என்னும் தலைப்பில் தமிழ்த்துறை சார்பாக ஒருநாள் தேசியக் கருத்தரங்கம் நடைபெற்றது. நிகழ்ச்சியை யதீஸ்வரி முகுந்தப்ரியா அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, ஆசியுரை வழங்கினார்கள். அவர்தம் உரையில் மாணவிகள் தாய்மொழியின் பெருமையினை உணர்ந்து அதனை சிறப்புடன் கற்க வேண்டும் என்று எடுத்துரைத்தார்கள். தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் க. சிந்து அவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள். கல்லூரி முதல்வர் முனைவர் ந. கமலா அவர்கள் தலைமையுரை வழங்கினார்கள். அவர்தம் உரையில் கருத்தரங்க நிகழ்வுகள் தான் தமிழின் சிறப்பினை மாணவிகளுக்கு எடுத்துரைக்கின்றன என்னும் கருத்தை முன் வைத்தார்கள். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் த. தனலெட்சுமி அவர்கள் சிறப்பு விருந்தினர்கள் குறித்த அறிமுகவுரை மற்றும் நோக்கவுரையும் வழங்கினார்கள். ஆந்திரபிரதேசம், திராவிடப்பல்கலைக்கழகம், தமிழ்மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் க. மாரியப்பன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு **‘தமிழும் வாழ்வியல் நெறிகளும்’** என்னும் தலைப்பில் சிறப்புரை வழங்கினார்கள். அவர்தம் உரையில் தமிழ் மொழியின் சிறப்புகளையும், வாழ்வியல் நெறிகளையும் எடுத்துக்கூறினார்கள். கருத்தரங்கில் கலந்து கொண்ட பேராசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுரையினை வழங்கினார்கள். நிறைவு விழாவில் சான்றிதழ் வழங்கப்பட்டது. தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் திருமதி பி. முத்துலெட்சுமி அவர்கள் நன்றியுரை வழங்கினார்கள்.